بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 24

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

18 ஷவ்வால் 1441 ஹிஜ்ரி கமரி 11 இஹ்ஸான் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

11 ஜூன் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَا تُؤْتُوا السُّفَهَآءَ اَمْوَالَكُمُ الَّتِیْ جَعَلَ اللّٰهُ لَكُمْ قِیٰمًا وَّارْزُقُوْهُمْ فِیْهَا وَاكْسُوْهُمْ وَقُوْلُوْا لَهُمْ قَوْلًا مَّعْرُوْفًا ۝

அல்லாஹ் உங்களுக்கு உதவக்கூடியதாக்கிய உங்கள் செல்வத்தை அறிவில் குறைந்தவர்களிடம் கொடுத்து விடாதீர்கள். அவற்றிலிருந்து அவர்களுக்கு உணவளியுங்கள். மேலும் அவர்களுக்கு ஆடை அணிவியுங்கள். மேலும் அவர்களிடம் பொருத்தமான (நல்ல) வார்த்தைகளையே கூறுங்கள். (4:6)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

நமது ஜமாஅத்திற்கு ஆற்றல்மிக்கவர்களின் அவசியம் இல்லை. மாறாக, நல்லொழுக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவரின் தேவையே இருக்கின்றது.... மலையை ஓரிடத்திலிருந்து அகற்றக்கூடியவர் ஆற்றல்மிக்கவர் கிடையாது. உண்மையான தைரியசாலி யார் என்றால், நல்லொழுக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலை பெற்றிருப்பவரே ஆவார்

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

நமது ஜமாஅத்திற்கு ஆற்றல்மிக்கவர்களின் அவசியம் இல்லை. மாறாக, நல்லொழுக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவரின் தேவையே இருக்கின்றது. உண்மையான விஷயம் என்னவென்றால், மலையை ஓரிடத்திலிருந்து அகற்றக்கூடியவர் ஆற்றல்மிக்கவர் கிடையாது. உண்மையான தைரியசாலி யார் என்றால், நல்லொழுக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலை பெற்றிருப்பவரே ஆவார். எனவே நினைவில் கொள்ளுங்கள். அனைத்து வீரத்தையும், ஆற்றலையும் நல்லொழுக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் செலவிடுங்கள். ஏனென்றால் இதுவே உண்மையான ஆற்றலும், வீரமும் ஆகும்.

### உண்மையான நல்லொழுக்கம் மிகப்பெரிய அற்புதமாகும்

நான் நேற்றோ அல்லது அதற்கு முந்தைய நாளோ கூறியிருந்தேன். அதாவது உண்மையான நல்லொழுக்கம் மிகப்பெரிய அற்புதமாகும். இன்று சந்திரன் பிளந்த அந்த அற்புதம் நிகழ்ந்தால் ஆராய்ச்சியாளர்களும், சயின்டிஸ்ட்டுகளும் அதனை சூரிய சந்திர கிரகணத்துடன் இணைத்து அதன் மகத்துவத்தை குறைக்க நாடுவார்கள். மேலும் பழைய அற்புதங்களை எடுத்து வைத்தால் அதனை கட்டுக் கதைகள் என்று கூறி விடுகின்றனர்.

உதாரணமாக, இந்த சூரிய சந்திர கிரகணமானது ரமலான் மாதத்தில் ஏற்பட்டது. மேலும் இமாம் மஹ்தியின் அடையாளங்களில் ஒரு வானத்து அடையாளமாக இருக்கின்றது. இது ரமலான் மாதத்தில் நடைபெற வேண்டும் என்பது நிரூபணமான ஒன்றாகும். நான் கேள்விப்பட்டுள்ளேன். இந்த ஹதீஸை இமாம் மஹம்மது பாகர் (அலை) அவர்கள் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டதாகும் என்று கூறி இதன் முக்கியத்துவத்தை சிலர் குறைக்க விரும்புகின்றனர். ஆனால் அவ்வாறு கூறுபவர்கள், ஒவ்வொருவராலும் நபித்துவ வாதம் செய்ய முடியாது என்பதை சிந்திப்பதில்லை. நபித்துவம் என்பது முன்னறிவிப்பு செய்வதற்கு கூறப்படும். அதாவது முன்னறிவிப்பு செய்வது ஒவ்வொருவரது பணியல்ல.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மஸீஹ் மற்றும் மஹ்தி என்று வாதம் செய்பவரது காலகட்டத்தில் சூரிய சந்திர கிரகணம் ஏற்படும். மேலும் அது ரமலானில் ஏற்படும். மேலும் இதற்கு ஆரம்ப நாட்களிலிருந்து இன்று வரை இவ்வாறு ஒருபோதும் நிகழ்ந்திருக்காது.

ஆனால் இதற்கு மாற்றமாக எவராவது கூறுவாரேயானால் அவர், இதற்கு முன்பு வாதம் செய்யக்கூடிய ஒருவரது காலகட்டத்தில் சூரிய சந்திர கிரகணம் ஏற்பட்டது என்றும் அது இந்த நேரத்தில் நிகழ்ந்தது என்றும் எடுத்துக் காட்ட வேண்டும். மேலும் மேலும் அவர் வாதம் செய்ததற்கு ஆதாரமாக இந்த சூரிய சந்திர கிரகணத்திற்கு முன்பே ஏதாவதொரு நபியின் காலகட்டத்தில் இதற்கான முன்னறிவிப்பு செய்யப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்ட வேண்டும். ஆனால் எவராலும் எடுத்துக் காட்ட முடியாது.

நான் இதனை எடுத்துக் கூறுவதற்கான காரணம் என்னவென்றால், அற்புதங்கள் தொடர்பாக ஏதாவதொரு சாக்குப்போக்குகளை மக்கள் எடுத்துக் கூறவே செய்கின்றனர். மேலும் அதனை மாற்றி எடுத்துரைக்க விரும்புகின்றனர். ஆனால் நல்லொழுக்க நிலைமை என்பது எத்தகைய அற்புதம் என்றால் அதன் மீது எவரும் சுட்டிக் காட்ட முடியாது. இதன் காரணமாகத்தான் நமது ரஸூல் (ஸல்) அவர்களின் மிகப்பெரிய ஆற்றல் மற்றும் வலுவான அடையாளமாக அன்னாரின் நல்லொழுக்கமே குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ ۝ (68:5)

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 121,122 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS

DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்களே! இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். மேலும் பொறுமையை மேற்கொள்ளுங்கள்.....**

**இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். அல்லாஹ் வழிகளை திறந்து தருபவனும், உங்களது பணிகளை சீர் செய்பவனும் ஆவான்**

**உங்களுக்கு முன்னால் சென்றவர்களில் ஒரு நபருக்காக பூமியில் குழி தோண்டப்பட்டது. மேலும் அதில் அவரது பாதி உடல் புதைக்கப்பட்டது. பிறகு அந்த நபர் இரண்டு துண்டாக வெட்டப்பட்டார். இந்த விஷயமும் அவர்களை தமது மார்க்கத்திலிருந்து தடுத்து நிறுத்த முடியவில்லை**

**அல்லாஹ் கப்பாப் மீது கருணை காட்டுவானாக. அவர்கள் தமது விருப்பத்துடன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் கட்டுப்பட்டு நடந்தவாறு ஹிஜ்ரத் செய்தார்கள். முயற்சி செய்தவாறு வாழ்க்கையை கழித்தார்கள். உடல் ரீதியாக அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். மேலும் எந்த நபர் நல்ல பணிகளை செய்வாரோ அவரது கூலி வீணாக்கப்படுவதில்லை**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் கப்பாப் பின் அரத் (ரலி) அவர்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 08 மே 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **08 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று பத்ர் போரின் சஹாபியான கப்பாப் பின் அரத் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். ஹஸ்ரத் கப்பாப் பனூ சஅத் பின் ஸைத் கோத்திரத்தைச் சார்ந்தவர். இவரது தந்தையின் பெயர் அரத் பின் சந்தலா ஆகும். இவரது சுட்டுப்பெயர் அபூ அப்துல்லாஹ் என்றும் சிலரது கூற்றின்படி அபூ முஹம்மது என்றும் அபூ யஹ்யா என்றும் கூறப்படுகிறது. அறியாமைக் காலத்தில் இவர் அடிமையாக்கப்பட்டு மக்காவில் விற்கப்பட்டிருந்தார். இவர் உத்பா பின் கஸ்வானின் அடிமையாக இருந்தார்.

சிலரது கூற்றின்படி உம்மே அம்மார் ஹஸாயியா உடைய அடிமையாக இருந்தார். பனூ ஸஹ்ராவின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர். ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்களில் இவர் ஆறாவது ஆளாக இருந்தார்கள். தமது இஸ்லாத்தை வெளிப்படுத்தி அதற்காக கடும் சித்திரவதைகளை அனுபவித்தவர்களுள் ஒருவராவார். கப்பாப், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு வருவதற்கும் அழைப்புப் பணியை தொடங்கும் முன்பு ஈமான் கொண்டவர் ஆவார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 121,122 கப்பாப் பின் அல்அரத் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுல் சஹாபா தொகுதி 2 பக்கம் 221 கப்பாப் பின் அல்அரத் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்தல் சஹாபா தொகுதி 2 பக்கம் 147 கப்பாப் பின் அல்அரத் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஜாஹித் கூறுகிறார்: எல்லாருக்கும் முன் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய கூற்றிற்குப் பதிலளித்தவாறு இஸ்லாத்தை வெளிப்படுத்தியவர்கள் ஹஸ்ரத் அபூபக்கர், ஹஸ்ரத் கப்பாப், ஹஸ்ரத் ஸுஹைப், ஹஸ்ரத் பிலால், ஹஸ்ரத் அம்மார், ஹஸ்ரத் சுமையா என்ற அம்மார் உடைய தாயார் ஆவார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அன்னாரது சச்சா அபூதாலிப் மூலமாக பாதுகாப்பு வழங்கினான். அபூபக்கரை அவரது சமூகம் மூலமாகப் பாதுகாத்தான் என்று எழுதக்கூடியவர் மிகவும் எச்சரிக்கையாகக் குறிப்பிடுகிறார். ஆனால் தெளிவான விஷயம் என்னவென்றால், எழுதியவரின் மனதில் வராத ஒரு விஷயமாவது சச்சா அபூதாலிப் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கினார் என்று கூறுகிறார்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் அநீதியாளர்கள் தரப்பிலிருந்து எந்தப் பாதுகாப்பும் பெற முடியவில்லை. அபூபக்கரும் பாதுகாப்பாக இருக்க முடிந்ததில்லை. அதற்கு வரலாறு சாட்சியாக உள்ளது. அவர்கள் பல்வேறு தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அபூதாலிப் உட்பட அநீதிக்குள்ளானார்கள். இவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள் என்று எழுதுபவர் கூறுகிறார். ஆனால் இது அவரது கருத்தாகும். வரலாறு சாட்சி பகர்வது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் பாதுகாப்பாக இருக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்கரும் பாதுகாப்பாக இருக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் அவர் தமது கருத்தை வெளிப்படுத்தியவாறு மேலும் எழுதுகிறார்: இருவரும் பாதுகாப்பாக இருந்தனர். ஆனால் மற்றவர்களுக்கு இரும்பு அங்கி அணிவிக்கப்பட்டு கடும் வெயியில் கிடத்தப்பட்டனர். அல்லாஹ் நாடியவரை அவர்கள் அந்தக் கடும் வெயிலில் சூட்டைத் தாங்கினர்.

சஹீயி கூறுகிறார்: ஹஸ்ரத் கப்பாப் மிகவும் சகித்துக் கொண்டார். குஃப்பார்களின் விருப்பமாகிய இஸ்லாத்தை மறுத்து விட வேண்டும் என்பதை ஏற்கவில்லை. எதிரிகள் அவர்களின் முதுகில் சூடான கற்களை வைத்தனர். எந்த அளவுக்கு எனில் அதனால் அவர்களின் முதுகில் மாமிசம் உருகியது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்தல் சஹாபா தொகுதி 2 பக்கம் 147 கப்பாப் பின் அல்அரத் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அசத்துல் காபாவின் அறிவிப்பில் கப்பாப் உடைய ஒரு சம்பவம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நிகழ்ச்சியில் வருகிறது. அதன் விபரமாக கருத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் சீரத்துல் காதமுன் நபிய்யீனில் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ஹம்ஸா இஸ்லாத்தை ஏற்று சில நாட்கள்தான் கழிந்து இருந்தன. முஸ்லிம்களுக்கு அல்லாஹ்

இன்னொரு மகிழ்ச்சியான சம்பவத்தைக் காட்டினான். அதாவது கடும் எதிரியாக இருந்த உமர் இப்போது முஸ்லிமாகி விட்டார். அவர் இஸ்லாத்தை ஏற்றதும் கூட மிகவும் சுவையான சம்பவமாகும். பலர் கேட்டிருக்கலாம்; படித்திருக்கலாம். இந்த சம்பவத்தை அன்னார் எழுதியுள்ளார்கள். அதனைக் கூறுகிறேன்.

இவரது வரலாற்றில் இதனைக் கூறுவது அவசியமாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய இயல்பில் சற்று கடுமை இருந்தது. இஸ்லாத்தின் அழைப்பு அதனை இன்னும் அதிகமாக்கியது. இஸ்லாத்திற்கு முன் ஹஸ்ரத் உமர் ஏழையான பலவீனமான முஸ்லிம்ளுக்கு இஸ்லாத்தை ஏற்றதற்காக கடும் துன்பம் கொடுப்பவராக இருந்தார்கள். அவர்கள் கடும் துன்பம் கொடுத்து களைப்படையும்போது கூட அவர்கள் திரும்பி வருவதைக் காண முடியவில்லை என்றதும், ஏன் இந்தக் குழப்பத்திலிருந்து திரும்ப வருவதில்லை? அதன் நிறுவனரை அதாவது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏன் முடித்து விடக்கூடாது? என்ற எண்ணம் வந்தது.

இந்த எண்ணம் வந்ததும் வாளை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை தேடிக் கொண்டு விரைந்தார். வழியில் உருவிய வாளுடன் இவர் செல்வதைக் கண்ட ஒருவர், உமரே! எங்கு செல்கிறீர்? என்று கேட்டார். அதற்கு உமர், முஹம்மது (ஸல்) அவர்களை முடிவுக்குக் கொண்டு வரச் செல்கிறேன் என்றார்கள். அம்மனிதர், 'நீர் முஹம்மதைக் கொன்று விட்டு பனு அப்தே மனாப் இடமிருந்து பாதுகாப்பாக இருந்து விடுவீர் என்று கருதுகிறீரா?' என்று கேட்டார். முதலில் உமது வீட்டைச் சரி செய்யும் உமது சகோதரியும் சகோதரியின் கணவரும் முஸ்லிமாகி விட்டனர் என்றார்.

உமர் ஆடிப்போய் விட்டார். வீடு திரும்பினார். தமது சகோதரி ஃபாத்திமாவின் வீடு நோக்கிச் சென்றார். வீட்டின் அருகில் சென்றதும் உள்ளிலிருந்து திருக்குர்ஆன் ஓதும் சப்தம் கேட்டது. கப்பாப் பின் அரத் உரத்த குரலில் ஓதிக் கொடுத்துக் கொண்டிருந்தார். உமர் அவர்களுக்கு அந்த சப்தம் கேட்டதும் கோபம் அதிகரித்தது. விரைவாக வீட்டிற்குள் நுழைந்தார். இவர் வரும் சப்தம் கேட்டதும் கப்பாப் உடனே மறைந்து கொண்டார். ஹஸ்ரத் ஃபாத்திமா திருக்குர்ஆன் ஏடுகளை அங்கும் இங்குமாக மறைத்து வைத்து விட்டார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய சகோதரி பெயர் ஃபாத்திமா ஆகும். ஹஸ்ரத் உமர் வீட்டிற்குள் வந்தார். உரத்த குரலில், 'நீங்கள் உங்கள் மார்க்கத்திலிருந்து விலகி விட்டீர்கள் என்று கேள்விப்பட்டேன்' என்றார். இதனைக் கேட்டு இவரது சகோதரியின் கணவர் சயீத் பின் சைத் அருகில் சென்று நின்றார். சகோதரி தனது கணவரைக் காப்பாற்ற அருகில் வந்தார். அவரும் அதனால் காயமுற்றார். ஆனால் ஃபாத்திமா தைரியமாக, 'ஆம் உமரே! நாங்கள் முஸ்லிமாகி விட்டோம். உங்களால் என்ன முடியுமோ செய்து கொள்ளுங்கள். நாங்கள் இஸ்லாத்தை விட முடியாது' என்றார்.

ஹஸ்ரத் உமர் மிகவும் கடுமையான மனிதராக இருந்தார்கள். ஆனால் அந்தக் கடுமையின் திரைக்குப் பின்னால் அன்பு, நேசத்தின் ஒளிக்கதிரும் மறைந்திருந்தது. அது அப்போது தமது நிறத்தைக் காட்டியது. சகோதரியின் இந்த தைரியமான வார்த்தைகளைக் கேட்டு கண்ணை உயர்த்திப் பார்த்தார். சகோதரி இரத்தத்தால் நனைந்திருந்தார். இதனைப் பார்த்து உமர் உடைய இதயத்தில் ஒரு சிறப்பான தாக்கம் ஏற்பட்டது. சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு சகோதரியிடம், 'நீங்கள் படித்துக் கொண்டிருந்த வார்த்தைகளைக் காட்டுங்கள்' என்றார்கள். அதற்கு ஃபாத்திமா, 'நான் காட்ட மாட்டேன். நீர் அதனை வீணாக்கி விடுவீர்' என்றார். உடனே உமர், 'இல்லை இல்லை என்னிடம் காட்டுங்கள். நான் நிச்சயமாக திருப்பித் தந்து விடுவேன்' என்றார்கள். உடனே ஃபாத்திமா, 'நீங்கள் அசுத்தமாக உள்ளீர்கள்; சுத்தமாகுங்கள். இதனை தூய்மையுடன் தான் வாங்க வேண்டும். முதலில் நீங்கள் உளூ செய்யுங்கள். பிறகு காட்டுகிறேன் பாருங்கள்' என்றார்.

மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்கள்: அவர்களின் நோக்கம், உளூ செய்வதனால் அவரது கோபம் தணியலாம் என்று நினைத்திருக்கலாம். குளிர்ந்த மனதுடன் படித்தால் சிந்திப்பதற்காக தகுதி ஏற்படும் என்று நினைத்திருந்தார். அவர் உளூ செய்து விட்டு வந்ததும் ஃபாத்திமா திருக்குர்ஆனின் ஏடுகளை அவர் முன் வைத்தார். அவர் அதனை எடுத்துப் பார்த்தார். அவை சூரா தாஹாவின் தொடக்க வசனங்களாக இருந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் மூழ்கியவரான உள்ளத்துடன் அதனைப் படிக்கத் தொடங்கினார். ஒவ்வொரு சொல்லும் அந்த நல்லியல்பின் உள்ளில் நிறைந்து அதன் தாக்கத்தை வெளிப்படுத்தியது. படித்துப் படித்து ஹஸ்ரத் உமர் இந்த வசனத்தை வந்தடைந்தார்.

إِنَّنِيٓ أَنَا ٱللَّهُ لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعْبُدْنِى وَأَقِمِ ٱلصَّلَوٰةَ لِذِكْرِىٓ ﴿١٥﴾

إِنَّ ٱلسَّاعَةَ ءَاتِيَةٌ أَكَادُ أُخْفِيهَا لِتُجْزَىٰ كُلُّ نَفْسٍۭ بِمَا تَسْعَىٰ ﴿١٦﴾

நான் உலகில் ஒரே ஒரு படைப்பாளனும் உரிமையாளனும் ஆவேன். என்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. நீங்கள் என்னையே வணங்க வேண்டும். என்னை நினைவு கூர்வதற்காகவே தொழுங்கள். நினைவில் கொள்ளுங்கள். வாக்களிக்கப்பட்ட நேரம் விரைவில் வர உள்ளது. ஒவ்வொருவரும் அவர் தம் செயல்களுக்குரிய கூலியைப் பெறுவதற்காக நாம் அதனை மறைத்து வைத்துள்ளோம். (20:15,16)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தைப் படித்ததும் அவரது கண்கள் திறந்தன. அவரது உறங்கிக் கொண்டிருந்த இயல்பு விழித்துக் கொண்டது. அவர் தன்னையும் அறியாமல், எவ்வளவு தூய வார்த்தைகள்! என்று கூறினார். கப்பாப் இந்த வார்த்தையைக் கேட்டதும் உடனே வெளியே வந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய துஆவின் விளைவாகும். அல்லாஹ்வே! உமர் பின் கத்தாப், அம்ர் பின் ஹிஸாம் அதாவது அபூஜஹில் இருவரில் ஒருவருக்கு இஸ்லாத்தை வழங்குவாயாக. என்று நேற்றுதான் அன்னார் இவ்வாறு துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நிலைமாறியது. அவருக்கு இதனைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அந்தஸ்தைத் தெரிந்த பிறகு மிகவும் மாறினார். எனக்கு உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருக்கும் இடத்தைத் தெரிவியுங்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? என்று கேட்டார். அவர் உருவிய வாளுடன் ஆரம்பத்தில் இருந்த அதே நிலையில்தான் இருந்தார்கள். வாளை அதற்குரிய இடத்தில் வைக்க வேண்டும் என்ற

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைப்பவர்கள், உங்களைப் போன்ற அடியார்களே. எனவே நீங்கள் அவர்களை அழைத்துக் கொண்டிருங்கள். நீங்கள் உண்மையாளர்களாயின் அவர்கள் உங்கள் அழைப்பிற்குப்பதில் அளிக்கட்டும். (7:195)

Faizal Hameed Ilahi, Tittacherry

எண்ணம் கூட வரவில்லை. உருவிய வாளைக் கையில் பிடித்திருந்தார்கள்.

எவ்வாறிப்பினும் அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாரே அர்க்கமில் தங்கியிருந்தார்கள். கப்பாப் அன்னாரின் இருப்பிடத்தைப் பற்றிக் கூறினார்கள். உமர் (ரலி) அங்கே சென்றார்கள். கதவை அழுத்தமாகத் தட்டினார்கள். சஹாபாக்கள் கதவின் இடுக்கு வழியாக ஹஸ்ரத் உமர் உருவிய வாளுடன் நிற்பதைக் கண்டு, கதவைத் திறப்பதற்கு தாமதம் செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கதவைத் திறக்குமாறு கூறினார்கள். ஹஸ்ரத் ஹம்ஸாவும் அங்கிருந்தார்கள். அவர்களும் கதவைத் திறக்குமாறு கூறினார்கள். 'உமர் நல்ல எண்ணத்தில் வந்தால் நல்லது. அவரது எண்ணம் தவறாக இருந்தால் அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவரது வாளாலேயே அவரது தலையைக் கொய்து விடுவேன்' என்று ஹம்ஸா கூறினார்கள்.

உடனே வாசல் திறக்கப்பட்டது. உமர் (ரலி) உருவிய வாளுடன் உள்ளே நுழைந்தார்கள். அவரைப் பார்த்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னால் வந்தார்கள். உமர் உடைய காலைப் பிடித்து வேகமாக இழுத்தவாறு, 'உமரே! என்ன எண்ணத்தில் வந்துள்ளீர்கள்? உம்மை நான் அல்லாஹ்வின் தண்டனையைப் பெறுவதற்குப் படைக்கப்பட்டவராகக் காணவில்லை. நீர் அல்லாஹ்வின் தண்டனை பெறுவதற்குப் படைக்கப்படவில்லை' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர், 'அல்லாஹ்வின் தூதரே! நான் முஸ்லிம் ஆவதற்காக வந்துள்ளேன்' என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சியில் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். உடனே சஹாபாக்கள் எவ்வளவு உரத்த குரலில் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள் என்றால், மக்காவின் மலைகளில் அது எதிரொலித்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 157–159)

ஹஸ்ரத் கப்பாப் கூறினார். நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எங்கள் கஷ்டங்களை எடுத்து வைத்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவின் நிழலில் தமது போர்வையின் மீது சாய்ந்து அமர்ந்திருந்தார்கள். நாங்கள் அன்னாரிடம் கேட்டோம். நீங்கள் எங்களுக்கு உதவி செய்யமாட்டீர்களா? மிகக் கஷ்டமான நிலை உள்ளதே? என்றதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உங்களுக்கு முன் இருந்தவர்களில் ஒருவருக்கு பூமி தோண்டப்பட்டு இவரை அதில் உடம்பை நட்டி தலையில் பற்கள் உள்ள வளையம் வைக்கப்பட்டது. அவரை இரு துண்டாக ஆக்கப்பட்டது. இதுவும் அவர்களை அவர்தம் மார்க்கத்திலிருந்து விலக்க முடிந்ததில்லை. இரும்பை சுட வைத்து அவர்களின் மாமிசத்தை எலும்பிலிருந்து தனியாகப் பிய்க்கப்பட்டது. இதுவும் அவர்களை அவர்தம் மார்க்கத்திலிருந்து விலக்க முடிந்ததில்லை.

மேலும் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் இந்தப் பணியை நிறைவேற்றி வைப்பான். நான் வந்ததன் நோக்கம் நிறைவேறும். எளிது ஏற்படும். உங்களில் ஒருவர் சராவிலிருந்து ஹஸர் மவுத் வரை குதிரையில் பயணம் செய்வார். சரா, ஹஸர் மவுத் இரண்டுக்கும் இடையில் 216 மைல் தூரம் உள்ளது. ஆனால் அல்லாஹ்வைத் தவிர வேறு எவர் மீதும் எந்தப் பயமுமின்றி பயணம் செய்வார்.

மேலும் கூறினார்கள்: தமது ஆடுகளை ஓநாய் தாக்கி விடுமோ என்ற பயம் இருக்காது. உங்கள் பயணத்தை விரைவுபடுத்துவீர்கள். இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3612 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 311 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னோரிடத்தில் இந்த அறிவிப்பு இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஹஸ்ரத் கப்பாப் அறிவிக்கிறார்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் வந்தேன். அன்னார் ஒரு மரத்தின் அடியில் படுத்திருந்தார்கள். தமது கையை தலைக்குக் கீழ் வைத்திருந்தார்கள். நான் அன்னாரிடம், 'அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் எங்களுக்காக துஆ செய்ய மாட்டீர்களா? எங்களது சமுதாயம் எங்களை எங்கள் மார்க்கத்திலிருந்து திருப்ப முயற்சி செய்கிறது' என்றேன். அன்னார் தமது முகத்தை மூன்று முறை திருப்பினார்கள். அப்போதும் நான் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டே இருந்தேன்.

உடனே தமது முகத்தைத் திருப்பியவாறு மூன்றாம் முறை எழுந்து அமர்ந்தவாறு கூறினார்கள்: "மக்களே! அல்லாஹ்வின் மீது அச்சம் கொள்ளுங்கள். பொறுமை செய்யுங்கள். இறைவன் மீது ஆணையாக! உங்களுக்கு முன் இறைவனது அடியார்கள் வாழ்ந்து சென்றுள்ளார்கள். அவர்களின் தலையில் பற்களைக் கொண்ட வளையம் வைக்கப்பட்டது. அவர்களின் உடல் இரு துண்டுகளாக ஆக்கப்பட்டது. அவர்கள் மார்க்கத்திலிருந்து விலகிச் செல்லவில்லை. அல்லாஹ்வின் மீது அச்சம் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களின் வழியைத் திறப்பவனும் உங்களின் பணிகளைச் சீர்படுத்துபவனும் ஆவான்."

(அல்முஸ்தத்ரக் அலஸ் சஹீஹைன் தொகுதி 3 பக்கம் 431,432, கிதாப் மஃரூஃபத்துல் சஹாபா, பாப் ஸிக்ர் மனாகிப் குப்பாப் பின் அரத் ஹதீஸ் எண் 5643)

ஹஸ்ரத் கப்பாப் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அவர் கூறுகிறார்: நான் ஒரு கொல்லன் ஆக இருந்தேன். ஆஸ் பின் அவாயில் எனக்கு கடன் திருப்பித் தர வேண்டியதிருந்தது. நான் அவரிடம் எனது விருப்பத்தைத் தெரிவிக்க வந்தேன். அவர், 'நான் முஹம்மது (ஸல்) உடைய பைஅத்திலிருந்து வெளியே வந்து விட்டேன் என்று நீ ஒரு அறிவிப்பு செய்ய வேண்டும். நீ அவ்வாறு முஹம்மதை மறுக்காத வரை கடனைத் தரமாட்டேன்' என்று கூறினார்.

கப்பாப் கூறுகிறார்: நான் அவரிடம், 'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒருபோதும் மறுக்க மாட்டேன். நீ மரணித்து திரும்ப உயிருடன் வந்தாலும் சரியே. அதாவது நான் முஹம்மது (ஸல்) அவர்களை மறுப்பது நடக்காத காரியமாகும்' என்றார்.

கப்பாப் கூறுகிறார்: இதனைப் பற்றி இந்த வசனம் இறங்கியது.

اَفَرَءَيْتَ الَّذِىْ كَفَرَ بِاٰيٰتِنَا وَقَالَ لَاُوْتَيَنَّ مَالًا وَّوَلَدًا ۝٧٨

## திருக்குர்ஆனிலிருந்து...

அவனையன்றி நீங்கள் அழைப்பவர்களால் உங்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. அவர்களால் தங்களுக்கும் எவ்வுதவியும் செய்ய முடியாது. நீங்கள் அவர்களை நேர்வழியின்பால் அழைத்தால் அவர்களால் (அதனைச்) செவியேற்க முடியாது. அவர்கள் உம்மைப்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் போன்று நீர் அவர்களைக் காண்கின்றீர். ஆனால் அவர்களோ பார்ப்பதில்லை. (7:198,199)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

اَطَّلَعَ الْغَيْبَ اَمِ اتَّخَذَ عِنْدَ الرَّحْمٰنِ عَهْدًا ۙ﴿۷۹﴾
كَلَّا ؕ سَنَكْتُبُ مَا يَقُوْلُ وَ نَمُدُّ لَهٗ مِنَ الْعَذَابِ مَدًّا ۙ﴿۸۰﴾
وَّ نَرِثُهٗ مَا يَقُوْلُ وَ يَاْتِيْنَا فَرْدًا ﴿۸۱﴾

நீர் அந்த மனிதரைப் பற்றி சிந்திக்கவில்லையா? அவர் நமது அடையாளங்களை மறுத்து வந்தார். எனக்கு நிறைய பொருள்களும் மகன்களும் வழங்கப்படும் என்று கூறி வந்தார். அவருக்கு மறைவான விஷயங்கள் தெரியுமா? அல்லது ரஹ்மானாகிய இறைவனிடம் வாக்குறுதி வாங்கி இருக்கிறார்களா? அவ்வாறு நடக்காது. இவர்களது வார்த்தைகளைப் பாதுகாத்து வைப்போம். அவர்களின் தண்டனையை நீளமாக்குவோம். அவர்கள் பெருமையடிப்பவற்றுக்கு நாம் வாரிசாகி விடுவோம். அவர்கள் நம்மிடம் தனியாகவே வருவர். (19:78–81)

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 122 கப்பாப் பின் அல்அரத் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கப்பாப் கொல்லராக இருந்தார்கள். வாள்களைத் தயார் செய்வார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர் மீது அதிக நேசம் கொண்டிருந்தார்கள். அவரிடம் அன்னார் சென்று விடுவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கப்பாப் இடம் வருகிற செய்தி கப்பாபின் உரிமையாளருக்குத் தெரிய வந்தது. அவர் சூடான இரும்பை எடுத்து கப்பாபின் தலையில் வைத்தார். அவர் இரும்புத் தொழில் செய்பவர். அவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அது குறித்து முறையீடு செய்தார்.

உடனே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வே! கப்பாபுக்கு உதவி செய்' என்று துஆ செய்தார்கள். விளைவு என்ன ஆயிற்று? என்பது பற்றி அறிவிப்பில் வருகிறது. அவரது எஜமானராகிய அம் அன்மாரா என்ற மனிதருக்கு தலையில் நோய் ஏற்பட்டது. நாய் போன்று சப்தமிட்டார். அதற்கு சிகிச்சையாக அவருக்கு கடும் சூடுள்ள இரும்பைக் கொண்டு தலையில் சூடு போடுமாறு கூறப்பட்டது. ஹஸ்ரத் கப்பாப் கடும் சூடுள்ள இரும்பை அவரது தலையில் வைத்து தழும்பை ஏற்படுத்தினார். கப்பாப் மூலமே அவர் தமது தலையின் மீது சூடுள்ள இரும்பால் சூடிட்டுக் கொண்டார்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்தல் சஹாபா தொகுதி 2 பக்கம் 148 கப்பாப் பின் அல்அரத் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபு லைலா மூலம் அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் கப்பாப், உமர் (ரலி) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் உமர் அருகில் வருமாறு கூறினார்கள். அம்மார் பின் யாஸிர் தவிர உம்மை விட வேறு தகுதியானவர் இல்லை என்றார்கள். ஹஸ்ரத் கப்பாப் இணை வைப்பவர்களினால் தரப்பட்ட கஷ்டங்களால் தமது முதுகின் அடையாளங்களைக் காட்டினார்கள். அவர் தமது முதுகு மற்றும் இடுப்பிலுள்ள வடுக்களைக் காட்டிய இன்னோர் அறிவிப்பு உள்ளது. அதில் சற்று விரிவாக உள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 122 கப்பாப் பின் அல்அரத் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஃஹ்இ அறிவிக்கிறார்: ஹஸ்ரத் கப்பாப், உமர் பின் கத்தாபிடம் வந்தார். ஹஸ்ரத் கப்பாபை தமக்கு அருகில் அமர்த்தினார்கள். இந்தப் பூமியில் இவரைத் தவிர வேறு யாரும் இங்கு அமரத் தகுதி பெற்றவர் இல்லை. ஒரே ஒருவரைத் தவிர என்றார்கள்.

உடனே ஹஸ்ரத் கப்பாப், ''அமீருல் முஃமினீன் அவர்களே! அவர் என்னை விட தகுதியானவர் இல்லை. ஏனெனில் பிலால் இணை வைப்பவர்களின் கையில் இருந்தாலும் ஏதாவது உதவியாளர்கள் அவருக்கு இருந்தனர். அவர்கள் மூலம் அல்லாஹ் அவரைக் காப்பாற்றி வந்தான். எனக்கு பாதுகாப்பு வழங்க எவரும் இருக்கவில்லை. ஒருநாள் நான் என் நிலையை இவ்வாறு பார்த்தேன். மக்கள் என்னைப் பிடித்து எனக்காக நெருப்பை மூட்டி அதில் என்னைப் போட்டார்கள்.'' என்று கூறினார்.

ஹஸ்ரத் கப்பாப் கூறுகிறார்கள்: உதவியற்ற நிலையில் இருந்தேன். மக்கள் என்னைப் பிடித்து எனக்காக நெருப்பை மூட்டி என்னை அதில் இட்டார்கள். ஒருவர் என்னை அதில் எறிந்தார். ஒருவர் தமது காலை எனது நெஞ்சில் வைத்து அழுத்தினார். எனது முதுகுதான் கடும் சூடான பூமியிலிருந்து என்னைப் பாதுகாக்கிறது என்றோ அல்லது எனது முதுகுதான் பூமியைக் குளிர வைத்தது என்றோ அவர் கூறினார். பிறகு அவர் எனது இடுப்பில் துணியை அகற்றினார். அந்த இடம் வெள்ளை தழும்பாக இருந்தது. எனது உடலில் இருந்து வடியும் கொழுப்பு நீரைத் தவிர எனது உடலைக் குளிர வைக்க எதுவும் இருக்கவில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 123 கப்பாப் பின் அல்அரத் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது பற்றி இன்னோர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது. ஷப்ஹீ கூறுகிறார்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப், ஹஸ்ரத் கப்பாப் இடம் அவர் இணை வைப்பாளர்களிடமிருந்து பட்ட கஷ்டங்களைப் பற்றி கேட்டார்கள். கப்பாப், 'அமீருல் முஃமினீன் அவர்களே! எனது முதுகைப் பாருங்கள்' என்றார். ஹஸ்ரத் உமர் அவரது முதுகைப் பார்த்த பிறகு, 'நான் அதுபோன்ற ஒரு முதுகைப் பார்த்ததில்லை' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் கப்பாப் கூறினார். நெருப்பு மூட்டப்பட்டு என்னை அதில் கிடத்தி விடுவார்கள். அந்த நெருப்பை எனது முதுகின் கொழுப்பு நீரைத் தவிர வேறு எதுவும் அணைக்காது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்தல் சஹாபா தொகுதி 2 பக்கம் 148 கப்பாப் பின் அல்அரத் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கப்பாப் பற்றி கூறினார்கள்:

நினைவில் கொள்ளுங்கள்! ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டதற்காக கடும் கஷ்டங்களைச் சகித்தவர்கள் அடிமைகளே ஆவர். அந்த வகையில் கப்பாப் பின் அல் அரத் கொல்லராகப் பணி செய்தார். மிகவும் ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டிருந்தார். மக்கள் மிகவும் கஷ்டம் தந்தனர். அவரது

## திருக்குர்ஆனிலிருந்து...

(மக்களே) திருக்குர்ஆன் ஓதப்படும்போது அதனைக் காது கொடுத்துக் கேளுங்கள். மேலும் மௌனமாக இருங்கள். இதனால் நீங்கள் கருணை காட்டப்படுவீர்கள். (7:205)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

உலையிலேயே அவர்களைப் போட்டனர். அவர்கள் சிறிதும் அசையாமல் இருப்பதற்காக நெஞ்சில் கல்லை வைத்தனர். அவர்கள் கூலி வேலை செய்தால் அந்தப் பணத்தை வழங்குவதிலிருந்து மறுக்கப்பட்டனர். இந்த உயிர், பொருள் நஷ்டங்களைத் தாங்கியவாறு ஒரு நொடி கூட விலகவில்லை. ஈமான் மீது உறுதியாக நிலைநின்றார்கள். அவர்களின் முதுகின் தழும்புகள் இறுதி வரை இருந்தன.

ஹஸ்ரத் உமர் உடைய ஆட்சியின் காலத்தில் அன்னார் தமது கடந்த கால சோதனைகளைப் பற்றி கூறினார்கள். அப்போது உமர் (ரலி) அவர்கள், அவரது முதுகைக் காட்டுமாறு கூறினார்கள். அவர் முதுகிலிருந்து துணியை விலக்கிக் காட்டியபோது முதுகு முழுவதும் வெள்ளைத் தழும்பால் வெண்குஷ்டம் போன்று காணப்பட்டது.

(துன்யா கா முஹ்ஸின், அன்வாருல் உலூம் தொகுதி 10 பக்கம் 273)

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

ஒருமுறை தொடக்கக்கால புதிய முஸ்லிம் அடிமை கப்பாப் உடைய முதுகு திறந்து காட்டப்பட்டபோது உடன் இருந்தவர்கள் பார்த்தனர். அவர்களின் முதுகின் தோல் மனிதத்தோல் போன்றே இருக்கவில்லை. விலங்குகளின் தோல் போன்று இருந்தது. உங்களுக்கு என்ன நோய்? என்று பதறிப்போய் கேட்டனர். ஹஸ்ரத் கப்பாப் சிரித்தவாறு, ''இது நோய் அல்ல. நினைவுக் குறிப்பு ஆகும். புதிதாக முஸ்லிமானவர்களை மக்காவின் வீதிகளில் அரபு மக்கள் சுடுகற்களால் புடமிட்டனர். இந்த அநீதி தொடர்ந்து இழைக்கப்பட்டது. அதன் விளைவால் எனது முதுகின் தோல் இவ்வாறு ஆகி விட்டது'' என்று கூறினார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 193)

ஆரம்ப கால இந்த முஸ்லிம்கள் ஏழைகளாகவும் இருந்தனர். பெரும்பாலார் அடிமைகளாக இருந்தனர் என்பதால் இந்தக் கஷ்டங்களைச் சகிக்க வேண்டியது ஏற்பட்டது. அதனையே கப்பாப் அவர்களின் சான்றுகள் மூலம் கேட்டோம். அவர்களுள் சிலர் நெருப்பில் படுக்க வைக்கப்பட்டனர். சிலர், சுடுகற்கள் ஏற்றப்பட்டனர். அவர்கள் அந்தக் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டனர். இஸ்லாத்திற்கு வளர்ச்சி ஏற்பட்டபோது அல்லாஹ் எவ்வாறு அருள் புரிந்தான்? அவர்களுக்கு எவ்வாறு உலகியல் தகுதிகளை வழங்கினான் என்பது பற்றி ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

உமர் ஒருமுறை தமது கிலாஃபத் காலக்கட்டத்தில் மக்கா வந்தார்கள். ஊரின் பெரும் பெரும் தலைவர்கள் பிரபல குடும்பத்தவர்கள் அன்னாரைச் சந்திக்க வந்தார்கள். ஹஸ்ரத் உமர் நமது குடும்பங்களைப் பற்றி நன்கு அறிவார்கள். இப்போது அன்னார் அரசராக இருக்கும் நிலையில் நம்மை நன்றாக கண்ணியம் செய்வார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் இருந்தார்கள். நாம் நமது இழந்த கண்ணியத்தை மீட்டுக் கொள்ளலாம் என்று எண்ணியவாறு வந்தனர். அவர்கள் வந்து அன்னாருடன் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சபைக்கு ஹஸ்ரத் பிலால் வந்தார்கள். பிறகு ஹஸ்ரத் கப்பாப் வந்தார்கள். இவ்வாறு ஒருவருக்குப் பிறகு மற்றவர் என ஆரம்பத்தில் ஈமான் கொண்டவர்கள் எல்லா அடிமைகளும் வரத் தொடங்கினர். அங்கிருந்து பேசிக் கொண்டிருந்த அந்தத் தலைவர்களிடம் அடிமையாக இருந்தவர்களாவர். வந்திருந்தவர்கள் இளைஞர்களான தலைவர்களாக இருந்தனர். இந்த அடிமைகள் அந்த இளைஞர்களின் தந்தையர் அல்லது பாட்டனார்களிடம் அடிமையாக இருந்தவர்கள் ஆவர். அந்த அடிமைகளை அந்த மக்கள் சக்தியுடன் இருக்கும்போது மிகவும் கடுமையாகக் கொடுமைப்படுத்தியவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு அடிமையும் வரும்போது அவர்களை மதித்து வரவேற்றார்கள். ஹஸ்ரத் கப்பாப், ஹஸ்ரத் பிலால் ஆகியோர் வரும்போது வரவேற்றார்கள். முதலில் ஈமான் கொண்ட மக்களாகிய அவர்கள் அடிமையாக இருந்தபோதிலும் சபைக்கு வரும்போது உமர் மிகவும் முக்கியத்துவம் தந்து மரியாதை செலுத்தினார்கள். ஹஸ்ரத் உமர் ஒவ்வோர் அடிமையையும் மிகவும் மதித்து வரவேற்றார்கள். இந்தத் தலைவர்களைப் பார்த்து சற்று பின்னால் செல்லுமாறு கூறினார்கள்.

அந்தத் தலைவர்களோ அருகில் அமர்ந்திருந்தார்கள். ஆரம்பத்தில் ஈமான் கொண்டவர்கள் வரும்போது மக்காவின் தலைவர்களைச் சற்று பின்னால் தள்ளி உட்காருமாறு கூறினார்கள். எந்த அளவுக்கு என்றால் அந்த இளைஞர்களாக தலைவர்கள் ஹஸ்ரத் உமரைச் சந்திக்க வந்தவர்கள் வாசல் வரை போய் விட்டனர். அக்காலத்தில் பெரிய பெரிய ஹால்கள் இருந்ததில்லை. சிறிய அறை. அனைவரும் உள்ளே உட்கார முடியாது.

எனவே அந்த இளைஞர்களான தலைவர்கள், விலகி விலகி செருப்பு போடும் இடத்திற்கு வந்து விட்டனர். மக்காவின் தலைவர்கள் செருப்புப் போடும் இடத்திற்கு வந்து சேர்ந்ததும் அவர்கள் தமது கண்களால் பார்த்தார்கள். எவ்வாறு ஒவ்வொரு ஆரம்ப கால முஸ்லிம்களும் அடிமைகளாக இருந்தவர்கள் வரும்போதும் அவர்களை முன்னால் அமர வைப்பதற்காக இந்தத் தலைவர்களைச் சற்று பின்தள்ளுமாறு கட்டளையிடப்பட்டு வருவதைக் கண்டு அவர்களுக்குள் பெரும் காயம் ஏற்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் எத்தகைய ஓர் ஏற்பாட்டைச் செய்திருந்தான் என்றால் ஒருவர் பின் ஒருவராக நிறைய முஸ்லிம்கள் வந்தனர். அவர்கள் ஒரு காலத்தில் காஃபிர்களிடம் அடிமையாக இருந்தவர்கள், ஒருவருக்காக பின்னால் தள்ளிச் சென்றிருந்தால் அந்தத் தலைவர்களுக்கு உணர்வு ஏற்பட்டிருக்காது. ஆனால் மீண்டும் மீண்டும் பின்னால் தள்ளிச் செல்ல வேண்டியது ஏற்பட்டதும் அவர்களால் அதனை சகித்துக் கொள்ள முடியாமல் போனது. அவர்கள் எழுந்து வெளியே போய் விட்டனர். வெளியே சென்று ஒருவர் மற்றவர் மீது புகார் கூறினார்கள்.

பாருங்கள்! இன்று நமக்கு எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது. ஒவ்வோர் அடிமை வரும்போதும் நாம் பின்னால் தள்ளப்படுகிறோம். இறுதியில் நாம் செருப்புக்கு அருகில் வந்து விட்டோம் என்றதும் ஓர் இளைஞர் கூறினார். இதில் யாருடைய குற்றம்? உமர் உடைய குற்றமா? நமது தந்தை பாட்டனாரின் குற்றமா? என்பது சிந்தித்தால்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நிச்சயமாக இந்த முழுமை பெற்ற வேதத்தை இறக்கிய அல்லாஹ்வே என் பாதுகாவலன். மேலும் அவன் நல்லவர்களுக்கு உதவி செய்கின்றான். (7:197)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

தெரிய வரும். இதில் உமர் உடைய குற்றம் ஒன்றுமில்லை. இது நமது தந்தை பாட்டனார்களின் குற்றமாகும். அதன் தண்டனை இன்று நமக்கு கிடைக்கிறது. இறைவன் தனது ரஸூலை அனுப்பினான். நமது தந்தை பாட்டன்கள் எதிர்த்தனர். இந்த அடிமைகள் ஏற்றுக் கொண்டனர். எல்லாக் கஷ்டங்களையும் மகிழ்ச்சியுடன் எற்றுக் கொண்டனர். எனவே நமக்கு இந்தச் சபையில் இழிவைச் சந்திக்க வேண்டியது வந்தது. இதில் உமர் உடைய குற்றம் எதுவும் இல்லை. இது நம்முடைய குற்றம்தான்.

இதனைக் கேட்டு விட்டு ஒருவர் மற்றவரிடம் நமது தந்தை பாட்டனார்களின் குற்றம்தான் என்பதை ஏற்கிறோம். இந்த இழிவின் கறையை அகற்ற ஏதாவது வழி இருக்கிறதா? இல்லையா? என்று ஆலோசனை செய்தனர். நமக்கு எதுவும் புரியவில்லையே? இது என்ன சிகிச்சை என்று உமரிடமே கேட்போம். அவர் உமர் இடம் வந்து இன்று எங்களுக்கு ஏற்பட்ட இழிவு குறித்து நீங்கள் அறிவீர்கள்.

ஹஸ்ரத் உமர் கூறினார்கள்: மன்னிக்க வேண்டும். நான் நிர்பந்தமாக இருந்தேன். அவர்களோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சபையில் கண்ணியம் பெற்றவர்களாக இருந்தனர். அவர்கள் ஒருவேளை உங்களுக்கு அடிமைகளாக இருக்கலாம். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் கண்ணியம் பெற்றவர்கள் ஆவர். எனவே எனது கடமை அவர்களுக்கு கண்ணியம் தர வேண்டியது இருந்தது.

உடனே அவர்கள், இது எங்களுக்கு குற்றத்தின் விளைவு என்று நாங்கள் அறிவோம். இந்தத் தழும்பை அகற்ற ஏதாவது வழி உள்ளதா? என்றனர். அவர்களுக்கு மக்காவில் என்ன சிறப்பு இருந்தது? அவர்கள் மக்காவின் எத்தகைய தலைவர்களாக இருந்தனர் என்று நாம் இதனை மதிப்பிட முடியாது. ஆனால் உமர் நன்றாக அறிந்தவர் ஆவார். ஹஸ்ரத் உமர் மக்காவில் பிறந்தவர். மக்காவில் வளர்ந்தவர்.

எனவே ஹஸ்ரத் உமர், இந்த இளைஞர்களின் தகப்பன்களும் பாட்டன்களும் எவ்வளவு மதிப்போடு இருந்தனர் என்று அறிந்திருந்தார்கள். அவர்களின் முன் எவரும் கண் உயர்த்திப் பார்க்க இயலாது. இவர்களுக்கு என்ன ஒரு திகில் இருந்தது? அவர்கள் மீது என்ன ஒரு பயம் இருந்தது? என்று அன்னார் அறிவார்கள்.

ஹஸ்ரத் உமர் இடம் வந்து அவர் ஒவ்வொருவராகக் கூறியதும் எல்லா சம்பவங்களும் நினைவுக்கு வந்தன. அன்னாருக்கு கடும் விசனம் ஏற்பட்டது. அவர்களால் கடும் விசனத்தால் பேசவும் முடியவில்லை. கைகளை உயர்த்தி வடக்குப் பக்கம் நீட்டி சைகை செய்தார்கள். வடக்குப்புறம் சிரியாவில் இஸ்லாமிய யுத்தம் நடைபெறுகிறது. அந்த யுத்தத்தில் இணைந்தால் ஒருவேளை இதற்கு பிராயசித்தம் ஏற்படலாம் என்பதாக இருந்தது. அவர்கள் உடனே எழுந்து யுத்தத்தில் சேர்வதற்காக சென்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: வரலாறு தெரிவிக்கிறது. அவர்களில் ஒருவரும் திரும்பி வரவில்லை. அனைவரும் அங்கே ஷஹீதாகி விட்டார்கள். இவ்வாறு தமது குடும்பத்தின் இழிவுக் கறையை அகற்றினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 65–67)

எனவே இதற்கு தியாகம் தேவைப்படுகிறது. முதலில் தியாகம் செய்தவர்களுக்கு பிற்காலத்தில் கண்ணியம் கிடைக்கிறது. பிறகு வருபவர்கள் தமது இழிவை அந்தத் தியாகத்தினால் மட்டுமே அழிக்க முடியும்.

ஹஸ்ரத் கப்பாப், ஹஸ்ரத் மிக்தாத் இருவரும் மதீனா ஹிஜ்ரத் செய்தார்கள். குல்ஸூம் பின் ஹிரம் அவர்களிடம் தங்கினார்கள். ஹஸ்ரத் குல்ஸூம் மரணம் வரை அவரிடம் தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் குல்ஸூம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ர் போருக்குச் செல்வதற்கு சில காலம் முன்பு வஃபாத் ஆகி விட்டார். பிறகு அவர் சஅத் பின் உபாதா இடம் சென்றார். அங்கு தங்கியிருந்தார். ஹிஜ்ரி 5 –ல் பனூ குரைலா வெற்றி கொள்ளும் வரை அங்கு இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 123 கப்பாப் பின் அல்அரத் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 57 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் கப்பாப் மற்றும் ஹஸ்ரத் ஸராஸ் பின் சமா உடைய விடுதலை விடப்பட்ட அடிமை தமீம். இருவருக்கும் இடையில் சகோதரத்துவம் ஏற்படுத்தினார்கள். இன்னொரு கூற்றின்படி ஹஸ்ரத் கப்பாபுக்கும் ஹஸ்ரத் ஜபர் பின் அத்தீக் உடன் சகோதரத்துவம் ஏற்படுத்தி இருந்தார்கள்.

ஹஸ்ரத் அல்லாமா இப்னுவின் பார்வையின்படி முதல் அறிவிப்பு நம்பத்தகுந்தது.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 123 கப்பாப் பின் அல்அரத் – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கப்பாப் பத்ர், உஹது, அகழ் உட்பட எல்லாப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 123 கப்பாப் பின் அல்அரத் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூ காலித் அறிவிக்கிறார்: ஒருநாள் நான் பள்ளியில் அமர்ந்திருந்தேன். கப்பாப் வந்தார். அமைதியாக அமர்ந்து விட்டார். மக்கள் அவரிடம் கூறினர். உங்கள் நண்பர் உங்களுடன் இருக்கிறார். நீங்கள் ஏதாவது கூற வேண்டும் என்பதற்காக அல்லது கட்டளை இடுவதற்காக இருக்கிறார் என்றார்கள். ஹஸ்ரத் கப்பாப், நான் என்ன கட்டளை இட வேண்டும்? நான் செய்யாத ஒன்றை எவ்வாறு கட்டளை இட முடியும்? என்றார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துல் சஹாபா தொகுதி 2 பக்கம் 149 குப்பாப் பின் அல்அரத் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ்வின் தக்வாவின் தகுதி அவர்களிடம் இந்த அளவுக்கு இருந்தது.

அப்துல்லாஹ் பின் கப்பாப் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை தொழுகை நடத்தினார்கள். அன்னார் சற்று நீட்டி தொழுகை நடத்தினார்கள். மக்கள் அன்னாரிடம், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதுவரை நடக்காத தொழுகையை நடத்தியுள்ளீர்களே’ என்றனர்.

அதற்கு அன்னார், ஆம்! இது விருப்பம் மற்றும் பயத்தின் தொழுகையாகும் என்றார்கள். இதில் நான் அல்லாஹ்விடம் மூன்று விஷயங்களைக் கேட்டேன். இறைவன் எனக்கு இரண்டை வழங்கினான். ஒன்றை நிறுத்தி வைத்துள்ளான். நான்

அல்லாஹ்விடம் பஞ்சத்தால் சமுதாயத்தை அழிக்கக் கூடாது என்று கேட்டேன். அல்லாஹ் வழங்கினான். எனது இறைவனிடம், எதிரிகள் எனது சமுதாயத்தின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்று கேட்டேன். அல்லாஹ் வழங்கினான். இன்று சமுதாயம் என்ற அளவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உம்மத் நிலைநாட்டப்பட்டுள்ளது. அதனை அந்த அரசாங்கமே ஆட்சி செய்கிறது.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், எனது உம்மத் தமக்குள் சண்டையிட்டுக் கொள்ளக் கூடாது என்று கேட்டேன். அல்லாஹ் அதனை வழங்கவில்லை. அதன் விளைவாகவே பிரிவினை வாதம் குஃப்ர் ஃபத்வா போன்றவை நடைபெறுகின்றன என்று கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் ஃபிதன்..... ஹதீஸ் எண் 2175)

தாரிக் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களின் ஒரு ஜமாஅத் கப்பாப் இடம் உடல்நலம் விசாரிக்கச் சென்றனர். அபு அப்துல்லாஹ் மகிழ்ச்சி அடையுங்கள். நீங்கள் உங்கள் சகோதரர்கள் இருக்கும் இடத்திற்கு கவ்ஸர் இடம் செல்கிறீர்கள். அதற்கு கப்பாப், அந்த சகோதரர்கள் சென்று விட்டார்கள். அவர்கள் தமது நற்கூலி எதனையும் வாங்கவில்லை. நாங்கள் அவர்களுக்குப் பிறகு எஞ்சியுள்ளோம். எங்களுக்கு உலகில் எவ்வளவு கிடைத்தது எனில் எமது கந்த கால நன்மைகளின் கூலி இங்கேயே கிடைத்து விட்டதோ என்று அஞ்சுகின்றோம் என்று கூறினார்கள். கப்பாப் கடும் நீண்ட நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்தல் சஹாபா தொகுதி 2 பக்கம் 149 கப்பாப் பின் அல்அரத் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹாரிஸா பின் முஸர்ரில் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அவர் கப்பாப் இடம் நோய் விசாரிக்கச் சென்றார்கள். அவர்களிடம் ஏழு இடங்களில் சிகிச்சைக்காக அழைக்கப்பட்டார்கள். அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஒருவர் மரணத்தை விரும்பி வேண்டக் கூடாது என்று கூறக் கேட்கா விட்டால் அதனை வேண்டிக் கேட்டிருப்பேன் என்று கூறினார். அவர்கள் கஷ்டத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு கஃபன் துணி கொண்டு வரப்பட்டது. அது ஒரு எகிப்தில் தயாரிக்கப்பட்ட ஒரு மெல்லிய கபாத்தி துணியாக இருந்தது.

அதனைப் பார்த்து அன்னார் அழுதவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சச்சா ஹம்ஸாவை ஒரு போர்வையால் கஃபன் இடப்பட்டது. அவர்களின் காலை மூடினால் தலை திறந்தது. தலையை இழுத்து மூடினால் கால் திறந்தது. பிறகு கால் பக்கம் புற்கள் வைத்து மூடப்பட்டது.

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எந்த நிலையில் பார்த்தேன் எனில் நான் ஒரு தினாருக்குக் கூட உரிமையாளனாக இருந்ததில்லை. ஒரு திர்ஹமும் இருந்ததில்லை. இப்போது என்ன நிலை எனில் எனது வீட்டில் ஓரத்திலுள்ள பெட்டியில் 40 ஆயிரம் திர்ஹம் இருக்கிறது. நான் பயப்படுகிறேன். தூய பொருள்கள் இந்த உலகிலேயே தரப்பட்டு விட்டதோ என்று அஞ்சுகிறேன்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 123 கப்பாப் பின் அல்அரத் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & லுகாத்துல் ஹதீஸ் தொகுதி 3 பக்கம் 484 – 2005 ஆண்டு லாஹூரிலுள்ள ஆஸிஃப் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் கப்பாப் அறிவிக்கிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஹிஜ்ரத் செய்தேன். அல்லாஹ்வின் திருப்தியை விரும்பி செய்தோம். அதன் கூலி அல்லாஹ்வின் பொறுப்பில் இருந்தது. எங்களில் பலர் வஃபாத் ஆகி விட்டனர். அவர்கள் தமது கூலியிலிருந்து சிறிதும் உண்ணவில்லை. அவர்களில் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்களும் அடங்குவர். அவர்களில் சிலர் அதன் பழத்தை உண்டோம். அதனைத் தேடுகிறோம். ஹஸ்ரத் முஸ்அப் நீண்ட நாள் முன் ஷஹீதானார். ஒரேயொரு போர்வைதான் இருந்தது. அதனை வைத்து அவரது தலையை மூடினால் கால் திறந்தது. காலை மூடினால் தலை திறந்தது. 'அவரது தலையை மூடி விட்டு காலை புல்லை வைத்து மூடுங்கள்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 1276)

ஸைத் பின் வஹப் கூறினார்கள்: நாங்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் வந்தோம். அன்னார் ஸிப்பீனில் இருந்து யுத்தத்திற்குப் பிறகு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கூபாவின் வாசலுக்கு வந்ததும் பார்க்கிறோம். எங்கள் வலப்புறம் 7 கபர்கள் இருந்தன. இது யாருடைய கபர்கள் என்று ஹஸ்ரத் அலி கேட்டார்கள்.

அமீருல் முஃமினீன் அவர்களே! நீங்கள் ஸிப்பீனில் போருக்காகச் சென்ற பிறகு கப்பாப் வஃபாத் ஆகி விட்டார். கூபாவுக்கு வெளியில் அடக்குமாறு வஸிய்யத் செய்து விட்டார்கள். அங்குள்ள வழக்கம் இறந்தவர்களை அவர்களின் வீடுகளின் முற்றத்திலேயே அடக்கி விடுவார்கள். ஹஸ்ரத் கப்பாபைப் பார்த்தபோது அன்னார் வெளியே அடக்குமாறு வஸிய்யத் செய்தார்கள். மக்களும் அவ்வாறே அடக்கினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கப்பாப் மீது கருணை காட்டுவானாக. அவர்கள் மகிழ்ச்சியுடன் இஸ்லாத்தை ஏற்றார். கட்டுப்பட்டவாறு ஹிஜ்ரத் செய்தார். ஒரு முஜாஹித் ஆக வாழ்வைக் கழித்தார். உடலளவில் சோதனைக்குள்ளாக்கப்பட்டார். எவர் நல்ல செயல் செய்வாரோ அல்லாஹ் அவரது கூலியை வீணாக்குவதில்லை. உடலளவிலான தொல்லைகள் அவருக்கு நீண்ட காலம் தரப்பட்டன.

பிறகு அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: நல்ல செயல் செய்பவரின் கூலியை அல்லாஹ் வீணாக்குவதில்லை. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அந்தக் கபர்களின் அருகில் சென்று கூறினார்கள். உங்களுக்கு ஸலாம் கிடைக்கட்டும். நீங்கள் முஃமீன்கள்; முஸ்லிம்கள். வருங்காலத்திற்குத் தேவையானவற்றை சேர்த்துக் கொண்டவர்கள் ஆவர். நாங்கள் உங்களுக்குப் பின்னால் விரைவில் வரவிருக்கிறோம். அல்லாஹ்வே! எங்களை மன்னிப்பாயாக. அவர்களையும் மன்னிப்பாயாக. கண்டும் காணாமல் எங்களையும் அவர்களையும் மன்னித்து விடுவாயாக. மறுமையை நினைத்துப் பார்க்கிற அந்த மனிதருக்கு, கணக்கின் நாளுக்காக அமல் செய்பவருக்கு அல்லாஹ் அஸ்ஸவ அஜல் –ஐ திருத்திப்படுத்துபவருக்கு நற்செய்தி!!

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அவர்களுக்காக இவ்வாறு துஆ செய்தார்கள். ஹஸ்ரத் கப்பாப் உடைய வஃபாத் ஹிஜ்ரி 37 –ல் தமது 73 –வது வயதில் நிகழ்ந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 124 கப்பாப் பின் அல்அரத் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

கல்விச் சான்றிதழ் வழங்கிய பிறகு 3.40 மணிக்கு ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

**ஹுஸூர் அவர்கள் இறுதி அமர்வின் நிகழ்த்திய சொற்பொழிவு**

தஷஹ்ஹுத், தவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா ஸஃப்ஃபின் 9 வது வசனத்தை ஓதி அதன் மொழியாக்கத்தை எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப அல்லாஹ்வின் தரப்பிலிருந்து இக்காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் அன்னார் (ஸல்) அவர்களின் மார்க்கத்தை உலகத்தில் பரப்பும் பணியை அல்லாஹ் அன்னாரிடம் ஒப்படைத்துள்ளான் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதமாக இருக்கின்றபோது, பிறகு அல்லாஹ் தனது உதவியின் காட்சிகளையும் வெளிப்படுத்திக் காட்டுவது அவசியமாகும்.

அதேபோன்று அல்லாஹ் வெளிப்படுத்தியும் காட்டினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளைப் பெற்றிருந்ததன் காரணமாக பல முறை இவ்விஷயம் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமும் அல்லாஹ் ஆறுதல் வழங்கினான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அந்த காலத்தில் இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்தை அழிப்பதற்கு மும்முரமாக செயல்பட்டு வந்தார்கள். அப்போது அன்னார் இந்த அறிவிப்பைச் செய்தார்கள். அதாவது இறைவன் என்னிடம் இதை கூறியுள்ளான். எதிரிகள் எந்த அளவுக்கு முயற்சி செய்தாலும் தற்போது இஸ்லாம் பரவுவது, மலர்வது அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்டு விட்டது.

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் செய்த வாக்குறுதி இன்றும் நிலைபெற்றுள்ளது. மேலும் தனது அனைத்து மகத்துவத்துடனும் அது முழுமை அடைய உள்ளது. இப்போது எந்த முன்னேற்றம் மஸீஹ் மற்றும் மஹ்தியின் மூலமாக நடக்க இருந்ததோ அது நானே ஆவேன்.

இதைப் பற்றி விவரித்தவாறு அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

இந்த மக்கள் தமது நாவினால், மார்க்கத்திற்கு ஒருபோதும் வெற்றி கிடைக்காது. மேலும் இந்த மார்க்கம் நமது கைகளால் அழிந்து விடும் என்று குரைக்கின்றனர். ஆனால் இறைவன் இந்த மார்க்கத்தை அழித்து விடுவானா? ஒருபோதும் அல்ல. இந்தப் பணியை முழுமை செய்யாதவரை அவன் இதை விட்டு விட மாட்டான்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த தீய கஃபிர் தனது நாவினால் இந்த ஒளியை அழிக்க விரும்புகின்றனர். மேலும் அல்லாஹ் தனது ஒளியை முழுமைப்படுத்துவான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தின் எதிரிகள் தமது பணிகளை செய்து கொண்டிருந்தனர். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வார்த்தைக்கேற்ப நமக்கு தெரிய வருவது என்னவென்றால், இது இம்மக்களின் துர்பாக்கியம் ஆகும். தம்மைத்தாமே முஸ்லிம்கள் என்று கூறக்கூடியவர்கள், மேலும் அவர்களில் அதிகமானோர் மார்க்க ஆலிம்கள் என்றும் கூறுகின்றனர்.

அவர்கள் இஸ்லாத்தை அழிப்பதற்கு காஃபிர்கள் செய்யக்கூடிய முயற்சிகளுக்கு எதிரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு உதவி செய்வதற்கு பகரமாக அன்னாரை எதிர்க்க துவங்கினர். மேலும் செய்து கொண்டு செல்கின்றனர். ஆனால் இவர்களது எதிர்ப்புகள் எவ்வாறு இதற்கு முன்பு ஒன்றும் செய்ய முடியாமல் போனதோ அதேபோன்று இன்று வரை எதுவும் செய்ய முடியாமல் ஆயிற்று. அல்லது ஆயிரம் வருட இருள் நிறைந்த காலத்திற்குப் பிறகும் கூட இஸ்லாத்தின் எதிரிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மேலும் இஸ்லாம் அல்லாஹ்வின் அருளால் பாதுகாப்பாக இருந்தது.

மேலும் திருக்குர்ஆன் அல்லாஹ்வின் அருளால் அதன் அசல் நிலையிலேயே இருந்தது. இப்போதும் அது நிலைத்திருக்கும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அல்லாஹ் இந்த வாக்குறுதியை செய்துள்ளான். அதாவது அன்னாரது காலத்தில் அன்னார் மூலமாக இஸ்லாத்தின் மறுமலர்ச்சி ஏற்படும். தற்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாகவே இஸ்லாத்தின் அழகிய போதனை உலகத்தில் வெளிப்படும். மேலும் வெளிப்பட்டுக் கொண்டும் இருக்கின்றது.

எந்த பணியை அல்லாஹ் முழுமை செய்ய நாடினானோ அதில் தடைகளை ஏற்படுத்தக்கூடிய பெயர் தாங்கிய ஆலிம்கள் மற்றும் எதிரிகளின் எதிர்ப்புகள் ஒருபோதும் வெற்றி பெற முடியாது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஆக நல்லுள்ளம் கொண்ட மக்கள் இந்த இரகசியத்தை புரிந்து கொள்கின்றார்கள். அவர்கள் அல்லாஹ்வின் அருளால் அன்னாரது ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைந்து கொண்டிருக்கின்றனர். ஆக இந்த காலத்தில் அல்லாஹ் வரை அழைத்துச் செல்லக்கூடிய வழியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இணைந்திருப்பதன் மூலமாகத்தான் நம்மால் அடைய முடியும்.

நான் சில சம்பவங்களை எடுத்துரைப்பேன். அதிலிருந்து அன்னாரது ஜமாஅத்தில் வரக்கூடியவர்களுக்கு அல்லது இணையக் கூடியர்களுக்கு அல்லாஹ் எவ்வாறு வழிகாட்டுகின்றான்? மேலும் அவர்களது ஈமானை முன்னேற்றமடையச் செய்வதற்காக எவ்வாறு அடையாளங்களை வெளிப்படுத்துகின்றான்? மேலும் எதிரிகளின் தலையை அல்லாஹ் எவ்வாறு குனியச் செய்கின்றான்? என்பது தெரிய வரும்.

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

**திருக்குர்ஆனிலிருந்து...**

(நபியே! எப்போதும்) மன்னிப்பைக் கடைபிடிப்பீராக. இயல்பிற்கேற்ற செயல்களைப் போதிப்பீராக. அறிவற்றவர்களை விட்டு முகந்திருப்பிப்புவீராக. (7:200)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த மக்கள் அல்லாஹ்வின் ஒளியை அணைக்க விரும்புகின்றனர். ஆனால் அல்லாஹ் அதை முழுமைப்படுத்துவான். எவராலும் அதை தடுத்து நிறுத்த முடியாது. மேலும் எவ்வாறு அல்லாஹ் இதனை முழுமைப்படுத்துவதற்காக வழிகாட்டுகின்றான்.

♦ மாலியைச் சார்ந்த முஹம்மது என்ற ஒரு நண்பர் கூறுகின்றார்:

அவர்கள் ஜமாஅத்தின் ரேடியோவை கேட்டார்கள். மேலும் ஜமாஅத்திற்கு எதிராக பேசப்படுகின்ற மக்களின் கூற்றையும் அவர்கள் செவியுற்றார்கள். இதற்குப் பிறகு அவர்கள், அல்லாஹ் நேரான வழியைக் காட்டுவதற்காக துஆ செய்ய ஆரம்பித்தார்கள். இதற்குப் பிறகு அவர்கள் கனவில் ஒரு முதியவரை கண்டார்கள். அந்த முதியவர், ஒவ்வொரு நபரும் அஹ்மதிய்யத்திற்கு வருவார். அவர் இப்போது வந்தாலும் சரி; பிறகு வந்தாலும் சரி என்று கூறினார்.

எனவே (இந்த கனவிற்குப் பிறகு) அவர்கள் பைஅத் செய்து விட்டார்கள். மேலும் அல்லாஹ்வின் அருளால் செயல் துடிப்புள்ள உறுப்பினராக இருக்கின்றார்கள்.

♦ பிறகு தன்ஸானிய்யாவின் முஅல்லிம் எழுதுகின்றார்கள்: ஒரு குடும்பத்தில் ஒரு நல்லியல்பு கொண்ட பெண்மணியான சஃபீரா சாஹிபாவின் தந்தை இவர்கள் சிறிய வயதில் இருக்கும்போதே மரணமடைந்து விட்டார்கள். இவர்களது தாய் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார்கள். இவர்களது தந்தை மது தயாரித்து விற்பனை செய்து வந்தார். மேலும் இவர்கள் அதற்கு உதவி செய்து வந்தார்கள். இவர்களது மதுக்கடையில் இவர்களுக்குரிய பங்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

ஒரு நாள் இவர்கள் ஜமாஅத்தின் ஒரு புக் ஸ்டாலை கடந்து சென்றார்கள். அப்போது ஜமாஅத்தின் சில நூல்களைப் பார்த்து சில கேள்விகளை கேட்டார்கள். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி கேட்டறிந்தார்கள்.

அவர்களுக்கு பதில் கிடைத்த பிறகு கூறினார்கள்: இதுதான் இஸ்லாம் என்றால் பிறகு நான் மிகவும் வழிதவறி இருக்கின்றேன். நான் இஸ்லாம் அஹ்மதிய்யத்தில் இணைய விரும்புகின்றேன். வீட்டிற்குச் சென்று பைஅத் படிவத்தை சிந்தித்துப் பார்ப்பதற்காக அவர்களுக்கு பைஅத் படிவம் கொடுக்கப்பட்டது. பைஅத் படிவத்தை படித்த பிறகு மறுநாளே தனது பெற்றோர்களிடம் மது தயாரிப்பதற்குரிய அனைத்து பொருட்களையும் ஒப்படைத்து விட்டார்கள்.

மேலும் அவர்களிடம், இனி இந்த வேலையுடன் எனக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. இந்த அனைத்தையும் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். நான் உண்மையான இஸ்லாத்தில் நுழைய விரும்புகின்றேன் என்று கூறினார்கள்.

பிறகு இவர்கள் பைஅத் படிவத்தை நிரப்பி ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள். மேலும் வேறொரு வழியின் மூலமாக தனது வாழ்க்கையை கழிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள்.

♦ செனிகாலின் முபல்லிக் எழுதுகின்றார்கள்: டப்கோரி ஒரு ஊர் ஆகும். அங்குள்ள ஒரு மைமூனா என்ற பெண்மணி அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை ரேடியோவில் கேட்டார்கள். பிறகு மிகவும் கஷ்டப்பட்டு மிஷன் ஹவுஸின் முகவரியை தெரிந்து கொண்டு மிஷனை வந்தடைந்தார்கள்.

மேலும் கூறினார்கள்: நான் அஹ்மதிய்யத்தில் இணைய விரும்புகின்றேன். எனது கணவர் இவ்விஷயத்தினால் மகிழ்ச்சியாக இல்லை. மேலும் அஹ்மதிய்யத்திலும் இணைய விரும்பவில்லை. ஆனால் நான் அஹ்மதிய்யத்தையே உண்மை இஸ்லாம் ஆக பெற்றேன். நான் எனது அனைத்து பிள்ளைகளுடனும் அஹ்மதிய்யத்தில் இணைய விரும்புகின்றேன். அத்துடன் ஒவ்வொரு மாதமும் எனது மற்றும் பிள்ளைகளின் சந்தாவை செலுத்துவதாகவும் வாக்குறுதியை வழங்குகின்றேன்.

மேலும் அவர்கள் ஜமாஅத்தில் இணைந்த பிறகு ஒவ்வொரு மாதமும் அவர்களே தமது மற்றும் தனது பிள்ளைகளின் சந்தாவை செலுத்துகின்றார்கள். அவர்களது பொருளாதார நிலையை விட அவர்கள் அதிகமாகவே சந்தா செலுத்துகின்றார்கள்.

♦ பெனின் போஹேகோர் ரீஜனின் உள்ளூர் மிஷனரி கூறுகின்றார்கள்:

ஒரு நாள் ரேடியோவில் தப்லீக் தூதுச் செய்தியை கேட்ட பிறகு ஆஜாஃபூன் சாஹிப் என்பவரது போன் வந்தது. அவர் கூறினார்: நான் ஒரு நீண்ட காலமாக ஜமாஅத்தின் பிரச்சாரத்தை கேட்டு வருகின்றேன். நான் சந்திக்க விருப்பமுடையவனாக இருக்கின்றேன்.

எனவே நான் அவரது வீட்டிற்குச் சென்றேன். அவர்கள் என்னிடம் கேட்பதற்காக சில கேள்விகளை எழுதி வைத்திருந்தார்கள். அதற்கு திருப்திகரமான பதில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. எனவே அப்போதே அவர்கள் பைஅத் செய்தார்கள். மேலும் ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சில நாட்களுக்குப் பிறகு அவர்களுக்காக சில புத்தகங்களை என்னுடன் எடுத்துக் கொண்டு சென்றேன். இந்த புத்தகங்களைப் படித்த பிறகு மீண்டும் என்னை சந்தித்தார்கள்.

மேலும் கூறினார்கள்: ஜமாஅத்தின் உண்மைத்துவம் என்மீது மிகவும் பிரகாசமாக வெளிப்பட்டு விட்டது. நான் எனது உள்ளத்து விருப்பத்துடன் இந்த உயிலை செய்துள்ளேன். அதாவது எனது வீட்டிற்கு முன்பு இருக்கின்ற நிலத்தை ஜமாஅத்திற்காக வக்ஃப் செய்துள்ளேன். ஜமாஅத் எவ்வாறு விரும்புகின்றதோ அந்த நிலத்தை பயன்படுத்திக் கொள்ளட்டும்.

மேலும் பைஅத் செய்த பிறகு அவர்கள் கலப்பற்றத் தன்மையிலும், நன்றியுணர்விலும் மேலும் அதிகமாக முன்னேற்றம் அடைந்தார்கள்.

♦ நமது முபல்லிக் கூறுகின்றார்கள்: இந்தியாவிலுள்ள அஹ்மதாபாதில் புத்தகக் கண்காட்சி சந்தர்ப்பத்தின்போது முஹம்மது சயீது சாயிப் என்ற ஒரு நபர் நமது அரங்கிற்கு வந்தார். அவர்களுடன் கருத்து பரிமாற்றம் நடைபெற்றது. மேலும் ஜமாஅத்தின்

**இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)**

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் உம்முடைய இறைவனைப் பணிவுடனும், அச்சத்துடனும் உம்முடைய உள்ளத்தில் நினைத்துக் கொண்டிருப்பீராக. மெதுவான குரலில் காலையிலும் மாலை நேரங்களிலும் (அவ்வாறே செய்து கொண்டிருப்பீராக). மேலும் ஒருபோதும் கவனமற்றவர்களைச் சார்ந்தவராக இருக்க வேண்டாம். (7:206)

A.Basheer Ahmad, Melapalayam

கொள்கைகள் தொடர்பாக உரையாடப்பட்டது.

அவர்களுடன் பேசியதில், ஜமாஅத்தைப் பற்றி அவர்களுக்கு அதிகமான அறிவு இருப்பது தெரிய வந்தது. அவர்களிடம் இது பற்றி கேட்டபோது, ஒரு நபரின் மூலமாக அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி தனக்கு கிடைத்ததாக அவர்கள் கூறினார்கள். ஆனால் நீண்ட காலமாக MTA வை நீண்ட காலமாக அவர்கள் பார்த்து வந்துள்ளார்கள். மேலும் MTA வில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கேள்வி பதில் நிகழ்ச்சிகளை கேட்டு வந்தள்ளார்கள். அதன் மூலம் அவர்களுக்கு மன திருப்தி ஏற்பட்டுள்ளது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தை உண்மையாக ஏற்றுக் கொள்கின்றேன்.

ஓர் அஹ்மதியை நான் சந்திக்க வேண்டும். மேலும் அவர் மூலமாக ஜமாஅத்தில் இணைய வேண்டும். மேலும் பைஅத் செய்து அன்பிற்குரிய நபியான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை ஏற்றுக் கொள்ளக் கூடியவனாக ஆக வேண்டும் என்பதே எனது உள்ளத்திலிருந்த துடிப்பாக இருந்தது. எனவே இந்த புத்தகக் கண்காட்சி சந்தர்ப்பத்தில் சந்திப்பு நிகழ்ந்தது.

பிறகு அவர்கள் மிஷன் ஹவுஸ் வந்து பைஅத் செய்தார்கள். மேலும் அல்லாஹ்வின் அருளால் கலப்பற்ற முறையில் இதில் நிலைத்து நிற்கின்றார்கள்.

♦ இந்தோனேஷியாவின் முபல்லிக் முஹம்மது அஹ்மது சாஹிப் எழுதுகின்றார்கள்:

கடந்த ஏழு மாதங்கள் எனது ஜமாஅத்தில் எந்த பைஅத்தும் நடைபெறவில்லை. ரமலான் மாதமாக இருந்தது. இந்த அருளுக்குரிய மாதத்தில், அல்லாஹ் எனக்கு ஏதாவதொரு வழியைக் காட்டுவாயாக. அதன் மூலமாக இங்கு பைஅத் நடைபெற வேண்டும் என்று நான் அதிகமாக துஆ செய்தேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் எனக்கு நினைவுக்கு வந்தது. அதாவது கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக ஒரு முபல்லிக் என்னிடம் ஓர் அஹ்மதியல்லாத நண்பரின் ஃபோன் நம்பரைக் கொடுத்தார். மேலும் கூறினார்: அவர் ஜமாஅத்தைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புகின்றார். அவரது வீடு ஜமாஅத்திற்கு மிக அருகில் இருக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் வாட்ஸ்அப் மூலமாக அவர்களை தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன். ஆனால் அவர்கள் தரப்பிலிருந்து எந்த பதிலும் எனக்கு வரவில்லை. சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் புறமிருந்து எனக்கு பதில் வந்தது. பிறகு வாட்ஸ்அப்பில் கலந்துரையாடினோம்.

இறுதியில் அவர்கள் மிஷன் ஹவுஸின் முகவரியைக் கேட்டார்கள். பிறகு சில நாட்களுக்குப் பிறகு மிஷன் ஹவுஸ் வந்தார்கள். பிறகு அவர்களுடன் பைஅத்தின் முக்கியத்துவம், காலத்தின் இமாமின் மீது ஈமான் கொள்வதன் அவசியம் மற்றும் பொருள் தியாகம் தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடினேன்.

நேர்மையை நேசிப்போம்
நேர்மையின்மையை வெறுப்போம்

எனவே அவர்கள் மீது அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவம் வெளிப்பட்டது. மேலும் அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் ஜூன் மாதத்தில் அவர்கள் பைஅத் செய்து விட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

♦ பேலேஸின் முபல்லிக் இன்சார்ஜ் அவர்கள் எழுதுகின்றார்கள்:

கதீஜா சாஹிபா என்ற பெண்மணி பேலேஸில் முதல் முதலாக பைஅத் செய்தார்கள். மேலும் அவர்கள் மூலமாக அங்குள்ள அதிகமான மக்களுக்கு அஹ்மதிய்யத்தைப் பற்றிய அறிமுகம் கிடைத்தது. மேலும் பலர் அஹ்மதிய்யத்தில் இணைந்தனர். இன்றைய நாட்களில் அவர்கள் லஜ்னா இமாயில்லாஹ்வின் தப்லீக் செயலராக தொண்டாற்றி வருகின்றார்கள். அவர்களது இயல்பு என்னவென்றால், அவர்கள் எங்கு சென்றாலும் இஸ்லாம் தொடர்பாக எடுத்துக் கூறுவார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஜனவரி 2019 ஆம் ஆண்டு ஆண்டு மாநாடு நடைபெறுவதற்கு சில நாட்கள் முன்பு நடந்த சம்பவமாகும். அதாவது அவர்கள் காரை ஓட்டிச் சென்று ஏதோவொரு உறுப்பினரை அழைத்துச் செல்வதற்காக சென்று கொண்டிருந்தார்கள். அப்போது எதிர்பாராத விதமாக அவர்களது கார் இன்னொரு காரின் மீது விபத்திற்குள்ளாகியது. அந்த கார் ஏதோவொரு வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்தது. அந்த காரின் மீது இவர்களது கார் மோதியது.

அந்த காரின் உரிமையாளரான கார்லா சாஹிபா வெளியே வந்தபோது கதீஜா சாஹிபா அவர்கள் கார்லா சாஹிபாவிடம் அதிகமாக மன்னிப்புக் கோரினார்கள். மேலும் நாம் போலீஸிடம் தகவல் தெரிவிக்கலாம் என்றும் கூறினார்கள். மேலும் அவர்கள் கார்லா சாஹிபாவிற்கு ஜமாஅதைப் பற்றியும் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

பேலேஸில் ஆண்டு மாநாடும் நடைபெற இருந்தது. எனவே இந்த சந்தர்ப்பத்தில் கார்லா சாஹிபாவிற்கு இவர்கள் அழைப்பு கொடுத்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு கார்லா சாஹிபா மாநாட்டிற்கு வந்தார்கள். மேலும் மாநாட்டிற்குப் பிறகு பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டார்கள்.

கார்லா சாஹிபாவிடம், நீங்கள் ஏன் அஹ்மதிய்யத்தில் இணைந்தீர்கள்? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் கூறினார்கள்: நான் சில நாட்களாக உங்களைப் பற்றி மீடியாவில் கேட்டு வந்தேன். நானும் உங்களுடன் இணைந்து விட வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் எனக்கு எந்தவொரு அஹ்மதியையும் தெரியாது. ஆனால் ஆனால் ஒரே ஒரு அஹ்மதியை மட்டும் அறிவேன்.

ஒரு நாள் விபத்து ஏற்பட்டபோது இறைவனே உங்களை என்னிடம் அழைத்து வந்துள்ளான் என்று எனக்கு தோன்றியது. மாநாட்டில் கலந்து கொண்டு எனக்கு மிகுந்த மன நிறைவு ஏற்பட்டது. அதாவது இந்த மார்க்கம் எனக்குரிய மார்க்கமாகும். மேலும் நான் பைஅத்தும் செய்து விட்டேன். இவ்வாறு அல்லாஹ் வழிகளை திறக்கின்றான்.

(உருது பத்ர் 14 நவம்பர் 2019 – தொடரும்...)

நேர்மையை நேசிப்போம்
நேர்மையின்மையை வெறுப்போம்

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக உம்முடைய இறைவனுக்கு நெருக்கமானவர்கள் அவனை வணங்குவது குறித்து பெருமையடித்துக் கொள்வதில்லை. அவர்கள் எப்போதும் அவனது தூய்மையை எடுத்துரைத்தும் அவனுக்குச் சிரம் பணிந்தும் இருப்பார்கள். (7:207)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 11 June 2020 Issue No. 24

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

ஹுஸூர் அவர்கள் ஹாலந்து வருகை தந்தபோது Ons Almere பத்திரிகை 25 செப்டம்பர் புதன்கிழமை பதிப்பில் இவ்வாறு எழுதியது:

அமைதியின் கலீஃபா ஹாலந்து வருகை தந்துள்ளார்கள். ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் ஹாலந்து நாட்டின் 39 வது ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவும், பைஅத்துல் ஆஃபிய்யத் பள்ளிவாசலை திறந்து வைப்பதற்காகவும் ஹாலந்து வருகை தந்துள்ளார்கள்.

கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் முழு உலகிலும் மனிதனுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்றார்கள். மேலும் படைப்பினங்களுக்கு தொண்டாற்றி வருகின்றார்கள். மேலும் முழு உலகிலும் அமைதியையும், மார்க்க சுதந்திரத்தையும் பரப்பி வருகின்றார்கள். கலீஃபா அவர்கள் உலகத்திலுள்ள பல்வேறு பாராளுமன்றங்கள் மட்டுமின்றி டச் பாராளுமன்றத்திலும் சொற்பொழிவாற்றியுள்ளார்கள். ஹுஸூர் அவர்கள் அக்டோபர் 1 ஆம் தேதி அல்மேரே நகரத்தில் பைத்துல் ஆஃபிய்யத் பள்ளிவாசலை திறந்து வைப்பார்கள்.

### 29 செப்டம்பர் 2019 (ஞாயிற்றுக்கிழமை)

ஹுஸூர் அவர்கள் காலை 6.30 மணிக்கு மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை தொழ வைத்தார்கள். ஃபஜர் நேரத் தொழுகையின்போது மிக வேகமாக மழை பெய்து கொண்டிருந்தது. ஹுஸூர் அவர்கள் தங்கியிருந்த இடமும், மாநாட்டுத் திடலும் சிறிது தூரத்தில்தான் அமைந்திருந்தது. இருப்பினும் பாதுகாப்பு படையினர் வாகனங்களை ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் ஹுஸூர் அவர்கள் வேகமாக பெய்யக்கூடிய மழையிலும் நடந்தே வருகை தந்தார்கள். வழிப்பாதையில் தண்ணீர் கெட்டியிருந்தது. ஒவ்வொரு அடியையையும் பார்த்து பார்த்து வைக்க வேண்டியதிருந்தது. தொழுகைக்குப் பிறகும் மழை பெய்து கொண்டிருக்கும் நிலையிலேயே திரும்பி வர வேண்டியதிருந்தது.

காலைப் பொழுதில் ஹுஸூர் அவர்கள் அலுவலக கடிதங்கள் மற்றும் அறிக்கைகளை பார்வையிட்டார்கள். மேலும் வழிகாட்டல்களையும் வழங்கினார்கள்.

இன்றைய தினம் ஹாலந்து ஆண்டு மாநாட்டின் மூன்றாவது நாளாகவும், இறுதி நாளாகவும் இருந்தது. நிகழ்ச்சி நிரலுக்கேற்ப மூன்று மணிக்கு ஹுஸூர் அவர்கள் ஆண்கள் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்தார்கள். மேலும் லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளை ஜமு செய்து தொழ வைத்தார்கள்.

தொழுகைகளுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் ஸ்டேஜிற்கு வருகை தந்தபோது முழக்கங்களால் திடலில் ஓசை நிரம்பியது. ஜமாஅத் உறுப்பினர்கள் மிகவும் உணர்வுப் பூர்வமாக முழக்கமிட்டார்கள்.

### ஹாலந்து ஆண்டு மாநாட்டின் இறுதி அமர்வு

இறுதி அமர்வின் ஆரம்பம் திருக்குர்ஆன் ஓதப்பட்டதன் மூலம் துவங்கியது. மதிப்பிற்குரிய யேமன் ஃபஸ்ல் அவ்தா சாஹிப் திலாவத் செய்தார்கள். அதன் உருது மொழியாக்கத்தை ஹாலந்தின் முபல்லிக்காகிய மதிப்பிற்குரிய சயீது அஹ்மது பட் சாஹிப் அவர்கள் செய்தார்கள். இதற்குப் பிறகு மதிப்பிற்குரிய ஹம்மாத் அஹ்மது அப்பாஸி சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உருது கவிதைகளை மிகவும் அழகிய முறையில் படித்தார்கள்.

இதற்குப் பிறகு கல்வித் துறையில் அதிக மதிப்பெண்களை பெற்று வெற்றி பெற்றிருந்த 14 நபர்களுக்கு சான்றிதழ்களையும், மெடலையும் ஹுஸூர் அவர்கள் வழங்கினார்கள். கல்விச் சான்றிதழைப் பெற்ற நற்பேறு பெற்ற மாணவர்களின் பெயர் இவ்வாறாகும்:

1. ஹிஷாம் ரானா (Primary Education Board தேர்வில் 100 சதவிகிதம் மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள்)
2. ஃபராஸ் ஹாரூன் சவுத்ரி (Primary Education Board தேர்வில் 100 சதவிகிதம் மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள்)
3. கமர் ஜாவீது (Higher Sec. Education Board தேர்வில் 81 சதவிகிதம் மதிப்பெண்களைப் பெற்றுள்ளார்கள்)
4. உஸாமா அஹ்மது பின் நூர் (FSC Pre Medical Eindhoven)
5. ஸைன் பாரி மலிக் (FSC Pre Medical Natural Science)
6. சஅத் அஹ்மது (Bsc Electrical Engineering zwolle, Holland)
7. ஸிலுர் ரஹ்மான் (Bsc Accounts, Leiden Holland)
8. அனீஸ் இக்பால் (MSC)
9. மஷ்ஹூர் சவுத்ரி (MSC Medicine Maastricht)
10. ஷர்ஜீல் அஹ்மது மலிக் (MSC Ictin Business Leiden)
11. ராஹீல் அஹ்மது சவுத்ரி (MSC International Management and Global Business, Schiedam Jamaat, Holland)
12. ஃபராஸ் அஹ்மது (MSC Electrical Engineering, Holland)
13. முஹம்மது அஹ்மது தாரீக் (MSC Accounts, Almere Jamaat, Holland)
14. தல்ஹா அஹ்மது (MSC Mathematics, Hollond)

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad